(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 55.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 ஜனவரி 17, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

3/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காணி கொள்ளல் சட்டத்தின் கீழ், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கென கொள்ளப்படுகின்ற காணிகளுக்காகச் செலுத்தவேண்டிய இழப்பீடுகளையும் பிற நிருவாகச் செலவுகளையும் உரிய நிறுவனம் ஏற்க வேண்டும் என்பதையும்;

(ii) ஆயினும், அந் நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற நிதி அக்கருமத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச் சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றல் செய்வதற்கான வழிமுறை;

(ii) அதற்கு ஏற்புடைய சட்டம்;

என்பன யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச்சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, காணி கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிமை மாற்றல் சான்றிதழ் ஒன்றின் ஊடாக அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் செய்யுமாறு காணி அமைச்சினால் பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அவ்வாறு பணிப்புரை வழங்குவதானது மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகள், காணிக் கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு முரணானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறாயின், இந்த நிலைமையைச் சீராக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2.

3867/2022

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடம் மற்றும் தரம் என்பவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவர்களுள் இன்றளவில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை பாடம் மற்றும் தரம் என்பவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு பாடசாலை, பாடம் மற்றும் தரம் என்பவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

3912/2022

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கல்வி முறை காரணமாக மாணவர்கள் கடுமையான மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(ii) தற்போது பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் சில மாணவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்;

(iii) போட்டிக் கல்வியைப் பெறும் மாணவர்களின் திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கல்வி முறை தொடர்பாக பெற்றோருக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) இலங்கையின் பொருளாதார செயன்முறைக்கு பங்களிக்கக்கூடிய கல்வி முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

3915/2022

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் இடம்பெற்றுள்ள வாகன விபத்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வாகன விபத்துகள் காரணமாக உயிரிழந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வாகன விபத்துகள் காரணமாக ஏற்படும் சமூகத் தாக்கம் யாதென்பதையும்;

(ii) வாகன விபத்துகளை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

3929/2022

கௌரவ அகில எல்லாவல,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) துறைமுகத்திலிருந்து பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்காக பதிவு செய்துள்ள போக்குவரத்து சேவை வழங்குனர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வழங்குனர்களை பதிவு செய்யும் போது பின்பற்றப்படும் முறையியல் யாது என்பதையும்;

(iii) அப்பதிவு வருடாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) துறைமுகத்திலிருந்து பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்காக இன்றளவில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

3931/2022

கௌரவ விஜித ஹேரத்,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரின் 2014.10.17 ஆந் திகதிய 14/1517/505/012– 1 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், "எனர்ஜி வர்ல்ட் இன்டர்நெஷனல் நிறுவனத்திற்கு" 1350 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நேரடி முதலீட்டில் அம்பாந்தோட்டை துறைமுகக் கைத்தொழில் வலயத்தில் 300 X 4 மெ.வோ LNG மின் உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கும், மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை மின் அலகொன்று 0.7 அமெரிக்க டொலர் வீதம் இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கும், அதன் பொருட்டு LNG களஞ்சியத் தொகுதியொன்றையும் முனையம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2017.12.20 ஆந் திகதிய 17/3011/725/035-1 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் நிலப்பகுதியில் தாபிக்கப்படும் LNG முனையம் ஒன்றையும் களஞ்சியத் தொகுதியொன்றையும் திக்ஓவிட்ட - கெரவலபிட்டியவில் நிர்மாணிப்பதற்கு மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இலங்கையின் LNG தேவையை மேற் குறிப்பிட்ட மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் பூர்த்தி செய்ய முடியுமா என்பதையும்;

(iv) இலங்கைக்குப் பாதகமான உடன்படிக்கையொன்றுக்கு மேற்படி நிறுவனம் அங்கீகாரத்தை கோரியுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

3933/2022

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கும்,— (1)

(அ) (i) ஓய்வூதிய உரித்துடைய மற்றும் உரித்தற்ற அரச ஊழியர்கள் என இரு சாரார் உள்ளனர் என்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் ஓய்வூதிய உரித்துடைய நியமனங்கள் என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் "தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குட்பட வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) இந்த முரண்பாடு குறிப்பிட்ட காலப் பரப்புக்குள் நீக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முறையியல் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரச ஊழியர்களின் ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கை யாதென்பதையும்;

(ii) 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 260 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பங்களிப்பு ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபிக்கும் பணி, அப்போதைய பொது நிர்வாக அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) 2022 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் பங்களிப்பு ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி நிதியத்தை தாபிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(vii) அதற்கன கால எல்லை தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

3936/2022

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கம் 2015 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் இதுவரை வெளிநாடுகளிடம், வெளிநாட்டு முகவராண்மை நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள கடன்கள் மற்றும் உதவிகளின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கடன் மற்றும் உதவி பெற்றுக்கொண்டதன் நோக்கங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) குறித்த கடன்கள் மற்றும் உதவிகள் அவை பெற்றுக்கொள்ளப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

3960/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதவிநிலை தாதி திருமதி வசந்தா மல்லவஆராச்சி அவர்கள் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேவையாற்றி 1985.04.01 ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ளார் என்பதையும்;

(ii) ஓய்வூதிய சுற்றறிக்கை 2/2012 இற்கு அமைவாக தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்காக 2012.12.18 ஆம் திகதி விண்ணப்பப்படிவங்களை மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்குச் சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(iii) அவ்விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை வைத்தியசாலைப் பணிப்பாளரின் இலக்கம் EBB/PP/ෙහදි/ර්.ඕ. மற்றும் 2013.01.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) பாணந்துறை பிரதேச செயலகத்தில் இருந்த ஓய்வூதியக் கோப்பு, ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கொண்டுவரப்பட்டது என்பதையும்;

(v) அப்பெண்மணி 2017.12.20 ஆம் திகதி இறந்ததன் பின்னர் அவருடைய கணவன் திரு. தயாபால ஹல்பே கமகே அவர்கள் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஆவணங்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்துள்ள போதிலும் இதுவரை அது கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் இழைக்கப்பட்ட தவறு காரணமாக திருமதி வசந்தாவின் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்தைச் செலுத்தாமை தவறு என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ் ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

4071/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டக் கம்பனிகளினால் இன்றளவில் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற இலங்கையிலுள்ள பெருந்தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி காணிகளின் உரித்து அரசாங்கத்திடமிருந்து அகற்றப்பட்டு முழுமையாக பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தோட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கின்ற போது உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(ii) குறிப்பாக, பெருந்தோட்ட வீடுகளுக்கு குடிநீர் வசதிகள் மற்றும் மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் வீடமைப்பிற்காக காணிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குத் தடையாக அமையுமென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நிலைமையினை சீர்செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 நவம்பர் 23 ஆம் திகதிய 2307/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 டிசம்பர் 01 ஆம் திகதிய 2308/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 29 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 02 ஆம் திகதிய 2308/51 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

4.

உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் (இல.126) — இரண்டாம் மதிப்பீடு.

5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் (இல.160) — இரண்டாம் மதிப்பீடு.

*6.

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர்,— தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் 2021.12.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 8.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2018),— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2022.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 9.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2022.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் நிறுவனச் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழ் 2021.12.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.11.29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,— ஹோமியோபதி மருத்துவ மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஹோமியோபதி சட்டத்தின் 15, 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் கீழ் 2022.07.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹோமியோபதி மருத்துவ மன்றத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.11.29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,— புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019),— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் போதைப்பொருள் பற்றிய தேசிய அதிகாரசபைச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2022.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.11.29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,— இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் நிறுவனச் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழ் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.11.29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய தொழில் நிறுவனச் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழ் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.11.29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,— தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2016),— 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் போதைப்பொருள் பற்றிய தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 2022.11.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.11.29 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16.

கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பொது நிறுவனங்கள் சுற்றறிக்கைச் சட்டத்தின் 6.5.3 பிரிவின் கீழ் 2022.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.09.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.11.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*17.

கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— அரச மரக்கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச தொழிற்சாலைகள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2022.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரச மரக்கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வன ஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.15 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*18.

கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— அரச மரக்கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச தொழிற்சாலைகள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2022.09.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய அரச மரக்கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வன ஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.15 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*19.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2014),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2017.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*20.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2020.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— தேசிய தாவரவியல் பூங்கா அறக்கட்டளை நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தாவரவியல் பூங்கா கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2019.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய தாவரவியல் பூங்கா அறக்கட்டளை நிதியத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*22.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2020.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*23.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*24.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2018.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*25.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*26.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.04.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*27.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,— இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் கீழ் 2022.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.11.30 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.02 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*28.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் 2022.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2022.12.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2022.12.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*29.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 சனவரி 03 ஆம் திகதிய 2313/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*31.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 7(3), 8, 10, 11 மற்றும் 12 பிரிவுகள் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியசரின் அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி அனுகூலங்கள் கொடுப்பனவுகள் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 20 ஆம் திகதிய 2302/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 1),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 27(1) மற்றும் (5), 28 (2) மற்றும் (3), 64(2) மற்றும் 70 பிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகாரப் பிரதேசத்தின் மற்றும் அதன் இடப்பரப்பில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆளாகாத் தகைமை பெறுவது தொடர்பில் கொழும்பு நகரப் பொருளாதார ஆணைக்குழுவிடம் வினவி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 28 ஆம் திகதிய 2299/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*34.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 2),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 27(1), 41(3)(ஊ) மற்றும் 41(9) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71(1) ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவிடம் வினவி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 28 ஆம் திகதிய 2299/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*35.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*36.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழான இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, 2021 செப்டெம்பர் 17 ஆம் திகதிய 2245/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*37.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழான இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2248/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*38.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 4(2)(ஊ) மற்றும் 8(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழான இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2248/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*39.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழான இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, 2021 டிசம்பர் 14 ஆம் திகதிய 2258/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*40.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கம்பனிச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 477 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 527 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்துடன் (திருத்தியமைக்கப்பட்ட) வாசிக்கப்பட வேண்டிய 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (123 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2022 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2303/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*41.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*42.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அரச துறை உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதினை 60 ஆகக் குறைத்தல் - 22/1480/601/012 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சேவைகள்/பதவிகளுக்கு ஏற்புடையவாறு கட்டாயமாக ஓய்வு பெற வேண்டிய வயதெல்லைகளைக் கருத்திற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சர் குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மீதான தீர்மானம்,—

அரச துறை உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதினை 60 ஆகக் குறைப்பது சம்பந்தமாக பிரதம அமைச்சர் மற்றும் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.09.09 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைப/22/1403/605/014 ஆம் இலக்க, 2022.09.12 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் 2022.09.22 ஆம் திகதிய 02 அமைச்சரவைக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.09.22 ஆம் திகதிய மேற்குறித்த அமைச்சரவைக் குறிப்பு சம்பந்தமான அமைப/22/1480/601/012 ஆம் இலக்க, 2022.10.03 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் ஊடாக, அந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்கு/பதவிகளுக்கு ஏற்புடைய கட்டாய ஓய்வு பெறும் வயதினை, அதில் முன்மொழியப்பட்டுள்ளவாறு திருத்தியமைப்பது சம்பந்தமாக விடயங்களை மேலும் ஆராய்ந்து அமைச்சரவைக்குப் பொருத்தமான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையிலான அமைச்சர் குழுவொன்றை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதம அமைச்சரின் தலைமையிலான மேற்குறித்த அமைச்சர் குழு ஏற்புடைய விடயங்களை ஆராய்ந்து தமது விதந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையினை 2022.10.10 ஆம் திகதிய அமைச்சரவைக் குறிப்பு ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதுடன், அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் ஊடாக பின்வரும் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

1. விசேட வைத்திய அதிகாரிகள், அரச வைத்திய அதிகாரிகள், பல் வைத்திய அதிகாரிகள் மற்றும் அரசில் பதிவுசெய்த வைத்திய அதிகாரிகளுக்கு மாத்திரம் ஏற்புடையவாறு, அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் (II) (அ), (ஆ) இல் குறிப்பிடப்படுகின்றவாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு உட்பட்ட வகையில், அமைச்சர் குழு அறிக்கையின் (அ) முதல் (உ) வரையான விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.

அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் (II) (அ), (ஆ) உட்பிரிவுகள் :-

(அ) ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் யூன் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் தமது பிறந்தநாள் காணப்படுகின்ற வைத்தியர்களுக்கு ஏற்புடைய ஆண்டின் ஜூன் மாதம் 30 ஆந் திகதி வரை சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி ஓய்வு பெறச் செய்தல்,

(ஆ) ஜூலை மாதம் 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி திகதி வரையான காலப்பகுதியினுள் தமது பிறந்தநாள் காணப்படுகின்ற வைத்தியர்களுக்கு ஏற்புடைய ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி ஓய்வு பெறச் செய்தல்,

அமைச்சர் குழு அறிக்கையின் (அ) முதல் (உ) வரை குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகள்:-

(அ) ஏலவே 63 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை எதிர்வரும் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்பு ஓய்வு பெறச் செய்தல்,

(ஆ) தற்போது 62 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 63 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(இ) தற்போது 61 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 62 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(ஈ) தற்போது 60 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 61 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(உ) தற்போது 59 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 60 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஏனைய அரச உத்தியோகத்தர்களைப் போன்று ஓய்வு பெறச் செய்தல்.

அந்தக் குறிப்பின்படி, விதந்துரைக்கப்பட்ட வைத்தியர்களை ஓய்வு பெறச் செய்யும் இடைக்கால நடவடிக்கைகள் 2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவடைய வேண்டும் என்பதுடன், அதன் பின்பு ஏனைய சகல அரச உத்தியோகத்தர்களையும் போன்று வைத்திய அதிகாரிகளும் 60 வயது பூர்த்தியடையும்போது ஓய்வு பெற வேண்டும் என்பது.

2. பிரேரணை அங்கீகாரத்திற்கு அனுமதி கிடைத்த பின்பு, மேற்குறித்த தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடையவாறு பொருத்தமான முறையில் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தியமைத்தல்.

மேற்குறித்த அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப, மேலே 1 மற்றும் 2 இல் உள்ளவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

43.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
ஶ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.
சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.
கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.
இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.
இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

63.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

64.
ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

65.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

66.
ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

67.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

68.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

69.

களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

70.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

71.

இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

72.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

73.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

74.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

75.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.